செய்தி வெளியீடு எண்: 147 நாள்: 20.02.2020

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் 19.2.2020 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் 2019–2020ஆம் ஆண்டிற்கான வாழும் கைவினைப் பொக்கிஷம் விருதுகளை 10 கைவினைஞர்களுக்கும், பூம்புகார் மாநில விருதுகளை 10 கைவினைஞர்களுக்கும், பட்டு வளர்ச்சித் துறை சார்பில் மாநில விருதுகளை 3 சிறந்த பட்டு விவசாயிகளுக்கும் வழங்கி கௌரவித்தார்கள்.

தமிழ்நாட்டில் உள்ள கைவினைஞர்களை ஊக்குவிக்கவும், அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் நோக்கத்துடனும் தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம், பூம்புகார் என்ற பெயரில் சிறப்பாக செயல்பட்டு வருகின்றது. கைவினைஞர்களை போற்றும் விதமாக தமிழ்நாடு அரசு பல்வேறு விருதுகளை ஒவ்வொரு ஆண்டும் வழங்கி கௌரவித்து வருகிறது.

தமிழ்நாட்டில் கைத்திறன் தொழிலில் பணிபுரிந்து அதற்காகவே தங்கள் வாழ்க்கையை அர்ப்பணித்துக் கொண்ட கைவினைஞர்களுக்கு "வாழும் கைவினைப் பொக்கிஷம்" என்ற உயரிய விருது வழங்கப்படும் என்று 8.5.2013 அன்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சட்டமன்றப் பேரவை விதி எண் 110–ன் கீழ் அறிவிப்பு வெளியிட்டார்கள். அதன்படி, 65 வயதுக்கு மேற்பட்ட திறன்மிகு கைவினைஞர்களுக்கு, **"வாழும் கைவினைப் பொக்கிஷம்"** என்ற விருது 2013–ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகிறது. இவ்விருதானது, தலா ஒரு லட்சம் ரூபாய் ரொக்கப் பரிசு, 8 கிராம் தங்கப் பதக்கம், ஒரு தாமிரப் பத்திரம் மற்றும் சான்றிதழ் கொண்டதாகும்.

2019–2020–ஆம் ஆண்டிற்கான "வாழும் கைவினைப் பொக்கிஷம்" விருதுகள் திரு.ஜி. வித்தியா சங்கர் ஸ்தபதி, திரு. எம். ராஜமாணிக்கம், திரு. கே. வெங்கடாசலம், திரு. டி. வெள்ளைக்கண்ணு, திரு. என். ஜெகதீஸ்வரன், திரு. ஆர். ராமலிங்கம், திரு. எம். பொன்னுசாமி, திரு. எம். துரைராஜ், திரு. எம். கணேசன், திரு. வி. பலராமன் ஆகிய 10 விருதாளர்களுக்கு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலா ஒரு லட்சம் ரூபாய் ரொக்கப் பரிசு, 8 கிராம் தங்கப் பதக்கம், ஒரு தாமிரப் பத்திரம் மற்றும் சான்றிதழ் வழங்கி கௌரவித்தார்கள்.

கைவினைப் பொருட்களைத் தயாரிக்கும் கைவினைஞர்களை ஊக்குவிக்கும் வகையில், சிறந்த 10 கைவினைஞர்களுக்கு ஆண்டுதோறும் "பூம்புகார் மாநில விருது" தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்டு வருகிறது. இவ்விருதுகள், 50 ஆயிரம் ரொக்கப்

பரிசுடன், 4 கிராம் தங்கப் பதக்கம், தாமிரப் பத்திரம் மற்றும் சான்றிதழ் ஆகியன உள்ளடக்கியதாகும். இவ்விருது பெறும் கைவினைஞர்கள் பொருளாதாரத்தில் பின்தங்கியவராக இருக்கும் பட்சத்தில் இந்திய அரசால் வழங்கப்பட்டு வரும் மாதாந்திர ஓய்வூதியம் ரூ.3500/– பெற தகுதி உடையவராகிறார்கள்.

2019–2020–ஆம் ஆண்டு பூம்புகார் மாநில விருதுகளை திரு. எம். முருகராஜ், திரு. வி. மோகன், திரு. ஆர். பிரசன்ன வெங்கடேஷ், திரு. கே. பால்ராஜ், திரு. ஜி. சுந்தரம், முனைவர் எம். சந்திரசேகரன், திருமதி என். கைருன்னிஸா, திருமதி எம். கண்மணி, திரு.ஆர். குமரகுரு, திருமதி எம். டி. வனிதா ஸ்ரீ ஆகிய 10 விருதாளர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலா 50 ஆயிரம் ரூபாய் ரொக்கப் பரிசு, 4 கிராம் தங்கப் பதக்கம், தாமிரப் பத்திரம் மற்றும் சான்றிதழ் வழங்கி கௌரவித்தார்கள்.

2019–2020ஆம் ஆண்டிற்கான பட்டு வளர்ச்சித் துறை மானியக் கோரிக்கையில், மாநில அளவில் மூன்று சிறந்த பட்டு விவசாயிகளுக்கு முறையே 1 லட்சம் ரூபாய், 75 ஆயிரம் ரூபாய் மற்றும் 50 ஆயிரம் ரூபாய் பரிசு வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அதன்படி, 2019–2020ஆம் ஆண்டிற்கான மாநில அளவில் சிறந்த பட்டு விவசாயிக்கான முதல் பரிசுக்கான 1 லட்சம் ரூபாய்க்கான வங்கி வரைவோலையை திருப்பூர் மாவட்டத்தைச் சேர்ந்த திரு. நா.அன்பழகன் அவர்களுக்கும், இரண்டாம் பரிசுக்கான 75 ஆயிரம் ரூபாய்க்கான வங்கி வரைவோலையை நாமக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த திரு. ப. பிரபு அவர்களுக்கும், மூன்றாம் பரிசுக்கான 50 ஆயிரம் ரூபாய்க்கான வங்கி வரைவோலையை தருமபுரி மாவட்டத்தைச் சார்ந்த திரு. து.செந்தில் அவர்களுக்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கி கௌரவித்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு. பா. பென்ஜமின், தலைமைச் செயலாளர் திரு.க. சண்முகம், இ.ஆ.ப., கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை முதன்மைச் செயலாளர் திரு. பிரதீப் யாதவ், இ.ஆ.ப., தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் / முதன்மைச் செயலாளர் டாக்டர் சந்தோஷ் பாபு, இ.ஆ.ப., பட்டு வளர்ச்சித் துறை இயக்குநர் திருமதி ப. ஸ்ரீவெங்கட பிரியா, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**
**நாள்: 20.2.2020**